# மாணவர் கூட்டமைப்பு தொடக்க விழா

காரைக்குடி அருகே அமராவதிபுதூரில் உள்ள ஸ்ரீ இராஜ இராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் துறை மாணவர்களின் கூட்டமைப்பு தொடக்க விழா நடைபெற்றது. டஸ்கர் ரப்பர் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர் கே.கோவிந்தன் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இன்றைய ரப்பர் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்தையும், அதில் வேலை வாய்ப்புகள் பற்றியும், இந்தியாவில் மிகக் குறைந்த அளவில் இந்த ரப்பர் தொழில்நுட்பம் உள்ளதால் மாணவர்கள் இதில் சிறப்பு பயிற்சிகள் பெற்று சுய வேலைவாய்ப்புக்கு தகுதி பெறும் வழி முறைகளையும் விளக்கினார். முன்னதாக கல்லூரியின் துணைமுதல்வர் மற்றும் இயந்திரவியல் துறைத் தலைவர் ஹையாசிந்த் சுகந்தி வரவேற்புரை ஆற்றி துவக்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் திரு.கே.வேல்மணிராஜன்,DeanProf.P.L.சுப்பிரமணியன், மாணவர் நலனுக்கான இயக்குநர் Prof.S.ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.